என்பது ஒரு சாதாரணமான ரொட்டீன் நிகழ்ச்சி தான். ஆனால், சட்டப்படி வழக்கு போடப்பட்டு இருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். எந்த செக்ஷன் கீழ் அவர்கள் மீது வழக்குப் போடப்பட்டு இருக்கிறது? யார் மீது போடப்பட்டு இருக்கிறது? செக்ஷன் 302-ன் கீழ் போடப்பட்டுள்ளதா? அல்லது வேறு செக்ஷன் கீழ் போடப்பட்டுள்ளதா என்கிற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம் ஜி. இராமச்சந்திரன்: என்னால் சரியாக பேச முடியாமல் இருப்பதால், நான் படித்ததை சரியாக கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். உதாரணமாக, தலைமைக் காவலர் வேணுகோபால் மீது இந்தியத் தண்டனைச் சட்டம் 323, 330, மற்றும் 348-ன் கீழ் கிரிமினல் வழக்கு தொடர அரசு ஆணையிட்டது.

திரு அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்கிற செக்ஷன் எந்தக் குற்றத்திற்காக என்று சொன்னால் விளக்கமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வழக்கறிஞராக இருக்கின்ற உறுப்பினர் இதை அறிந்து இருக்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: போலீஸ் லாக்கப்பில் யாராவது மரணம் அடைந்தால், அந்த மரணம் சந்தேகத்திற்கு இடமான வகையில் ஏற்பட்டு இருந்தால், அதற்குப் போதுமான சாட்சியங்கள் இருந்தால், அல்லது ஒரு வேளை போலீஸ் லாக்கப்பில் காவல் துறையைச் சேர்ந்தவர்களால் கொலை செய்யப்பட்டது என்று நிலைமை இருக்குமானால், அதற்குப் பொறுப்பாக உள்ள காவல் துறையைச் சேர்ந்தவர்கள் மீது கிரிமினல் வழக்கு தொடரப்படுகிறது என்று சொன்னால், அது கொலைக் குற்றம் என்ற முறையில் செக்ஷன் 302-ன் கீழ் வழக்கு தொடரப்படுமா என்று அறிய விரும்புகிறேன். இங்கே தெரிவிக்கப்பட்டு இருக்கின்ற செக்ஷன்கள் வேறுபட்ட குற்றங்களுக்கானவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குகள் எந்தத் தன்மையானவை என்று எப். ஐ. ஆர். எழுதுகிறார்களோ அந்த அடிப்படையில் அதற்கேற்ற வகையில் செக்ஷன் போடப்பட்டு, வழக்குகள் தொடரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர், சட்டம் தெரிந்தவர், அறிவார் என்று நம்புகிறேன்.

3. அரசினர் தீர்மானம்

அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொண்டை ஓரளவிற்குச் சரியாக இல்லாததால், இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டு இருக்கும் போலீஸ் துறை, தீயணைப்புத்

துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தை இன்றைக்கு இத்தோடு முடித்துக் கொண்டு, மீண்டும் திங்கட் கிழமை (29—3—1982) காலை 9 மணிக்குத் தொடரலாம் என்றும், அன்றைக்கு (29—3—1982) வினாக்கள்-விடைகள் நேரம் தள்ளி வைக்கலாம் என்றும், தவிர்க்கப்படலாம் என்றும் முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. அதைப் போலவே, ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளவாறு, இன்று மாலை 4 மணி முதல் 6 மணி வரையில் கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்கிற மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெறும்; 6 மணி முதல் 8 மணி வரையில் கால்நடை வளர்ப்பு, சமூக நலன் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெறும். இதற்கு மாண்புமிகு எதிர்க் கட்சிகளுடைய தலைவர்களும் தங்களுடைய இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்கேற்ப, மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்கள் இந்த அளவோடு இந்த மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தை ஒத்தி வைத்து, இதனை மீண்டும் திங்கட்கிழமை காலை 9 மணிக்குத் தொடர லாம் என்றும், மாலையில் ஏற்கனவே அறிவித்தபடி நிகழ்ச்சிகள் நடைபெறும் என்றும் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திங்கட்கிழமை யன்று காலை 9 மணியிலிருந்து 10 அல்லது 10-30 மணி வரையில் விவாதத்தை தொடர்ந்து வைத்துக் கொண்டாலும் கூட, 10-30 மணிக்கு முதல்வர் அவர்களின் பதிலுரை முடிந்தபிறகு, நாம் ஏற்கெனவே வைத்திருந்த முறைப்படி மாநில ஆட்சித் தலைவர் கள், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மற்றும் மாநிலச் சட்டமன்றம் ஆகியவைகள் வழக்கப்படி எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும் என்றும் அவைகள் எல்லாம் சரியாக கில்லட்டின் வைத்து 1 மணிக்கு முடிக்கப்பெறும் என்றும், அதன் படி அவையின் நடவடிக்கைகளை மாற்ற வேண்டும் என்றும் நான் பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஆகையினால் தான் 29 ஆம் தேதி திங்கட்கிழமை காலை கேள்வி பதில் நேரம் தவிர்க்கப்படவேண்டும் என கோரினேன், 9 மணிக்கே முதலமைச்சர் அவர்களின் பதிலுரையை தொடங்கிவிட லாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முன்னவர் அவர்கள் கூறிய கருத்துக்களை அவை ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறேன். ஆகவே இன்றைய போலீஸ் மானிய கோரிக்கை யும் தீயணைப்பு மானியக் கோரிக்கையும் அவற்றின் மீதான விவாதமும் இத்தோடு இன்று முடிவுற்று மீண்டும் திங்கட்கிழமை 29—3—1982 அன்று காலை 9 மணிக்கு துவங்கப்படும். இன்று மாலை 4 மணிக்கு, எடுத்துக்கொள்ளவிருக்கிற கைத்தறித்துறை சமூக நலத்துறை ஆகிய மானியக்கோரிக்கைகள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டதுபோல் எடுத்துக் கொள்ளப்பெறும். திங்கட்

1982 மார்ச் 27] [பேரவைத் தலைவர்]

கிழமை காலை கேள்வி நேரம் கிடையாது. மற்ற மானியக் கோரிக்கைகள் 1 மணிக்கு முன்பு அறிவித்தது போல் கில்லட்டின் வைத்து முடிக்கப்பெறும். ஆகவே, பேரவையின் இன்றைய காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை 4 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-06 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

[மாலை 4-00]

மாலை 4.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு க. இராசராம் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

(2) வரவுசெலவு, 1982–83 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(இ) கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத்தொழிலும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

'' மானியக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,45,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குக் கல்வி சலுகையும் மற்ற வசதிகளும் செய்து தர தனிக்குழு அமைப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,45,92, 000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, கைத்தறி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்றது. அதை நான் படித்ததாகக் கருதி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்த பிறகு இறுதியாக என்னுடைய கருத்தை நான் தெரிவிக்கிறேன்.

* 219-235ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.